முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1687

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.05.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. அறம் வேலி கொண்ட அரங்கனே
   அருட்தயவு பலம் கொண்ட தேசிகனே
   வரம் தந்து மக்களை மீட்க வந்த
   வள்ளலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்பிரமணியர் யானும்
   அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 29ம் நாள், 12.05.2024, ஞாயிற்றுக்கிழமை)
   வரமாக அரங்கன் தருகின்ற
   வல்லமை கொண்ட மகாமந்திர தீட்சை எல்லாம்
3. அறமாக அரணாக மக்களுக்கு காப்புகூடி
   அகிலத்தில் பேரற்புதம் நிகழ்த்த கூடும்
   கூடவே அரங்கன் காட்டுகின்ற
   குறையில்லாத சன்மார்க்க நெறி மார்க்கம்
4. நாடெங்கும் பரவி நிற்க
   ஞானிகள் உருவாகும் ஆக்கபலமாக
   ஆகவே உலகெலாம் சக்தி பெருகி அரங்கன் அவதாரத்தின் மகிமையாக
   அகிலத்தில் உலக மாற்றம் நிகழும்
5. நிகழுமே அரங்கன் சக்திகொண்ட
   நிலவுலகில் ஞானிகள் படை பெருகி
   அகிலத்தில் ஞானவான்கள் ஆட்சி
   ஆற்றல் மிக்க ஞானஆட்சியாக உதயமாகும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–